JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **92/2015** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | வெங்கடாச்சலம் | Village | கந்தாம்பாளையம் பிரிவு, பெருந்துறை |
| Father's Name | ராமைய்யா | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 24.02.2026.**

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கந்தாம்பாளையம் பிரிவில் மெஸ் வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தேதி மற்றும் மாதம் நியாபகம் இல்லை. 15 வருடங்களுக்கு முன்பாக விபத்து நடந்த மறுநாள் போலீசார் சாட்சி வேண்டும் என்று சொல்லி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. 1 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

1. 27.11.2014 ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு எனது கடையில் இருவர் டீ சாப்பிட்டு விட்டு எனது கடைக்கு முன்பு உள்ள பெருந்துறை to ஈரோடு ரோட்டில் கடைக்கு சற்று கிழக்கில் கந்தாமபாளையம் பிரிவு அருகில் கிழக்கு நோக்கி நடந்து

சென்றவர்கள் மீது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த ஸ்கூட்டரை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று முன்னால் ரோட்டின் ஓரமாக நடந்து சென்றவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. ஓட்டுநரும் கீழே விழுந்தார் என்றும் நான் பக்கத்தில் இருந்த தெரு விளக்கு வெளிச்சத்தில் பார்த்து ஓடிப் போய் பார்த்தேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு கேட்டு தெரிந்த போது வெங்கமேடு குறுக்குச் சந்தை சேர்ந்த அபுதாகீர் என்பவருக்கு பின்தலையில் பலமான அடிபட்டு தலையிலும், காதிலும் இரத்தம்வந்து மயங்கி கிடந்தார் என்றால் சரியல்ல.

2. அபுதாகீர் மீது மோதியது ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டர் TN 33 BF 7611 ஓட்டுநர் ஈரோடு மூலப்பாளையத்தைச் சேர்ந்த டேனியல் கிருபாகரன் என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. டேனியல் கிருபாகரனுக்கும், தலையில் நெற்றியில் காயம் ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல. 108 ஆம்புலன்ஸ் மூலம் அபுதாகீரையும், டேனியல் கிருபாகரையும், எலியாசும் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார்கள் என்றால் சரியல்ல. பெருந்துறை உதவி ஆய்வாளர் விசாரிக்கும் போது நடந்த சம்பவங்கள் அனைத்தையும் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** போதிய வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).